**O.S.No.18/2017**

பி.வா.சா.2, திரு. அப்துல் அசன் சேட்
நாள் : 24.11.2025 நேரம் : 12.00PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)முகமது அப்துல்லா என்பவர் எனது தந்தையை பெற்ற பாட்டனார் என்றால் சரிதான். அவரது மனைவி அஷ்மா பீவி என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் காதர் சுல்தான் என்றால் சரிதான். சாகுல் ஹமீது என்பவர் யார் என்றால் எனது சித்தப்பா ஆவார். ஆமினா பீவி எனது தகப்பனார் உடன் பிறந்த சகோதரி. எனது வீட்டிற்கு மேற்கே வெள்ளையன் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வெள்ளையன் என்பவர் ஆமினா, முகம்மது சுல்தான், சாகுல் ஹமீது, அஷ்மா பீவி ஆகியோர்கள் மீது 1965 ல் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு விவரம் எனக்கு தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2)தாவா சொத்து எனது தகப்பனாரின் பாட்டனார் முகம்மது அப்துல்லாவுக்கு கிரைய சொத்து என்றால் சரிதான். மேற்படி முகம்மது அப்துல்லா 1942 டிசம்பர் 14 ம் தேதி உமையனன் ஏகாளி, பழனியாண்டி ஏகாளி அவர்களது மைனர் குழந்தைகள், பூச்சி ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் நாவீத சிதம்பரபண்டிதன் வகையறா வீட்டிற்கும், மேற்படியாளர்களின் சந்திற்கும் மேற்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் அசல் வழக்கு எண். 193/1965 ல் பரமக்குடி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3)வா.சா.ஆ.4 ஆவணத்தில் கிழமேல் ஜாதியடி 25, தென்வடல் 15 அடி எனது பாட்டனார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு

தெரியவில்லை. எனது வீட்டின் தென்வடல் நீளம் தெரியுமா என்றால் தெரியாது. கிழமேல் அளவும் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணம் கிரையம் பெற்ற அதே நபர்களிடமிருந்து 1945 ல் (வா.சா.ஆ.5) வேறு ஒரு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்திலும் நாவீத சிதம்பரபண்டிதன் வகையறா வீட்டிற்கும், மேற்படியாளர்களின் சந்திற்கும் மேற்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி 1942 மற்றும் 1945 ஆகிய இரு பத்திரங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் நகல் எடுத்து தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி பத்திரங்களை தாக்கல் செய்தால் எனக்கு பாதகமாக அமையும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4)அஷ்மா பீவி, சாகுல் ஹமீது, முகம்மது சுல்தான், ஆமினா ஆகியோர்கள் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்படி அசல் வழக்கு எண். 193/1965 ல் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தவறும் வாதிகள் தாக்கல் செய்ய தயாராக உள்ளார்கள் என்பதற்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எனது வீடு கல் சுவர் என்றாலும், வாதிகள் வகையறா வீடு ஆதிகாலத்திலிருந்து மண் சுவர் என்றால் சரியல்ல. இருவரின் வீடுகளும் ஆதிகாலத்திலிருந்து மண் சுவர் தான். மேற்படி வாதி மற்றும் பிரதிவாதிகளின் மண்சுவர் சுமார் 80 வருடத்திற்கு முன்னர் கட்டப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

5)வாதிகள் தற்போது பத்மினி வகையறா வீடு எதுவும் கட்டவில்லை என்றால் சரியல்ல. மண் சுவரை இடித்து விட்டு வீடு கட்டியுள்ளார்கள். மேற்படி வீட்டின் சுவர் வரிசையில் தான் மற்ற மண் சுவர்கள் உள்ளது என்றால் சரியல்ல. ஒரே வரிசையில் இல்லை, சுவர் நெலிந்துள்ளது. மேற்படி தாவா சொத்தில் கடாச்சலாம் 8 ம் வாதி வாசல் வைத்துள்ளார் என்றால் சரிதான், வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் வாசல் வைத்து புழங்கி வருகிறார். மேற்படி நான் சொல்லுவது தவறு என்றாலும் ஆதிகாலத்திலிருந்தே வாசல் வைத்து புழங்கி வருகிறார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும்

சரியல்ல. வாதிகள் முதுகுளத்தூர் கிராமத்தில் மிகவும் மைனாரிட்டி சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் சமுதாயம் இந்த ஊரில் அதிகமாக உள்ளது என்றால் சரிதான்.

6)நான் எங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தாவா சொத்தை ஆக்கிரமித்ததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விசயங்கள் வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகள் சொத்தை அபகரிப்பதற்காக சில ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளீர்கள் என்றாலும், மேற்படி மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. பிராது படி வாதி கோரிய பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றாலும், பிராது படி தீர்ப்பாக வேண்டியது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.30PM

APARNA JUDIT CHARLES
Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.11.24 14:11:32 +0530